LIBRARY
18 FEB 2002
PERIODICALS DIVISION

REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Founded 19 Feb 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு PATHUKAVALAN

மலர் 126
இதழ் 02
பக்கங்கள் 08
விலை 5 ரூபா
01 மாசி 2002

## பாதை திறப்பதற்கான முடிவு தற்போது அரசிடமே!

### யாழ். ஆயர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

## வடபகுதி வாழ் மக்களின் வாழ்க்கைச் செலவு பாதை மூடப்பட்டமையால் அதிகரித்துள்ளது

**யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தரைவழி பாதையொன்று திறக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தின் முழுமையினை கீழே தருகின்றோம். இக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகள், அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் ஜயலத்ஜய வர்த்தன, லெப். ஜெனரல் பலகல்ல ICRC தலைமையகம், UNHCR தலைமையகம், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

வடபகுதி வாழ் மக்கள் யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் இணைக்கும் தரைவழிப் பாதை இல்லாமையால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள்.

இத் தரைவழிப் பாதை திறக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பல தடவைகளில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் கொடுத்து வந்துள்ளோம். ICRC, UNHCR போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். பாதுகாப்பு காரணங்களுக்காக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமலே காலம் கடந்துவிட்டது.

புதிய அரசு பதவியேற்று சமாதான நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் கொண்டு போர் நிறுத்தத்தையும் அதன்வழி இயல்பு நிலையை ஏற்படுத்த முற்படுகின்ற வேளையில் இவ் ஆண்டுக்கான புத்தாண்டு செய்தியிலும் பாதை திறப்பதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தி இருந்தோம்.

யாழ்ப்பாணத்தையும் பெருநிலப் பரப்பையும் இணைக்கின்ற தரைவழிப் பாதை தடைப்பட்டமையால் மக்கள் அனுபவிக்கின்ற துன்பங்கள் ஏராளம். அனைத்துத் துன்பங்களுக்கும் இத் தரைவழிப் பாதையே அடிப்படைக் காரணம்

(8ஆம் பக்கம் தொடர்ச்சி)

## "நீதியும் மனித மேம்பாடும் நிலைபெற உழைப்போரை உருவாக்குவது பத்திரிசியார் கல்லூரியின் பணியாகும்"

### 150ஆவது ஆண்டின் பரிசளிப்பு விழாவில் பாப்பரசரின் பிரதிநிதி



பரிசளிப்பு விழாவில் பாப்பரசரின் பிரதிநிதி உரையாற்றுகையில்...

**"இன்று சமய சார்பற்ற உலகியல்சார் கல்விக்கான முன்னெடுப்புக்கள் வலுப்பெறும் வேளை கிறிஸ்தவ விழுமியங்களை உறுதியாக நிலைநாட்டி அனைத்து மக்களின் நலனுக்காக உழைக்கவும், நீதி, மனித மேம்பாடு ஆகியவற்றுக்காக செயற்படவும் வேண்டியது திருச்சபையின் கடமையாகும். இதுவே புனித பத்திரிசியார் கல்லூரியிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியாகும்" என பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ் யே செங் நாண் பத்திரிசியார் கல்லூரியின் 150வது ஆண்டு பரிசளிப்பு விழாவில் தெரிவித்தார்.**

01.18.2002 அன்று கல்லூரியின் மதுரம் சதுக்கத்தில் மேற்படி நிகழ்வுக்கு தலைமை தாங்கிய யாழ். ஆயர் தமது உரையில் "இன்றைய கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக அல்லாமல் ஆளுமை விருத்தியை மையப்படுத்தியதாக அமைய வேண்டும். அறிவு ஆற்றல் விருத்தியுடன் குணநலன்களும் உருவாக்கப்பட்டு நாளைய தலைமுறை சீரும் சிறப்புமிக்கதாக விளங்க கல்லூரி செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

கல்லூரியின் பதில் அதிபர் அருள்திரு ஜெறோ செல்வநாயகம் கல்லூரியின் 150ஆம் ஆண்டிற்கான அறிக்கையை சமர்ப்பித்தார். யுத்த பெயர்வுகள் பற்றி குறிப்பிட்ட பதில் அதிபர் இவற்றின் மத்தியிலும் மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் நிலைநாட்டிய சாதனைகளை விதந்துரைத்தார்.

சிறப்பு நிகழ்வாக கல்லூரியின் சிறப்புக்கும் சாதனைக்கும் காரணமாகத் திகழும் கல்லூரியில் முக்கிய ஆளணியினரான ஆசிரியர்

(8ஆம் பக்கம் தொடர்ச்சி)

## பல்கலை. மாணவர்களாகிய நீங்களும் சமூகத்திற்கு நன்மை செய்யவேண்டும்

### கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினருக்கு மன்னார் ஆயர்



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை 20.01.2001 யாழ். பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றிய அழைப்பின் பேரில் நல்லாயன் நடுநிலையத்துக்கு வருகை தந்து மாணவர்களோடு கலந்துரையாடினார்.

இந் நிகழ்வில் ஆயர் அவர்கள் பேசும் போது "சமாதானம் என்பது போரற்ற நிலை என வரலாற்று ரீதியாக நாம் கூறிக்கொள்கிறோம். ஆனால் உள்ள நிறைவுதான் சமாதானம். இந்த உள்ள நிறைவுதான் எமது ஆன்மீகச் செல்வம். எனவே உள்ளம் திறக்கப்படும் போதுதான் சமாதானம் பிறக்கும். உள்ளம் மூடப்பட்டிருந்தால் சமாதானம் உருவாக வாய்ப்பில்லை. பழிவாங்கல், மனக்கசப்பு, வெறுப்புணர்வு போன்ற செயல்கள்தான் உள்ளங்களை மூடிவைத்துள்ளன. இவைதான் மனிதர்களின் மனங்களில் மன இறுக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவை அகற்றப்பட்டால் தான் சமாதானம் பிறக்க வழியண்டு. தமிழ்மக்களும் சிங்கள மக்களும் தங்கள் மனங்களை இறுக மூடிவைத்துள்ளனர். சமாதானம் பிறக்க வேண்டுமானால் மன்னிப்பு என்பது அவசியமானது. கடவுள் அருளிய இந்தச் செயல் வாழ்க்கையில் நிகழ்ந்தால் சமாதானம் தோன்றும் இந்த மன்னிப்பு அன்பில் இருந்தே தோன்றுகிறது. எல்லா மனிதர்களும் சமாதானம் செய்ய வேண்டும். இதற்கு இனப் புரிந்துணர்வு சகோதர உணர்வு அவசியமாகிறது. இவைதான் இறுகிய இதயங்களை திறக்க வழி செய்யும் அதற்காக அனைத்து

(8ஆம் பக்கம் தொடர்ச்சி)

## அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு ஆயர்களாகிய நாம் எப்போதும் ஒத்துழைப்போம்!



### திருமலை-மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை

இலங்கைவாழ் மக்கள் சமாதானத்துக்கான தம் விருப்பத்தை தேர்தல் மூலம் வெளிக்காட்டியுள்ளார்கள். இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இருதரப்பினரும் இதற்கான முயற்சிகளில் தீவிரமாக செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். என்ன சவால் வந்தாலும் நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலனையும் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு விடா முயற்சியுடன் தமது செயற்பாடுகளை அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொள்வது மிக அவசியமாகும் என திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது

இந்நாட்டில சிறுபான்மை, பெரும்பான்மை இரு சமூகத்தினரும் யுத்தத்தினால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துள்ளனர். இனப்பிரச்சினைக்கான இறுதியான தீர்வு எட்டப்படுவ

(8ஆம் பக்கம் தொடர்ச்சி)

## மும்மடியின் நாயகனே முழு மதியாய் வாழ்க! வாழ்க!!



பிறப்பின் 85ஆவது ஆண்டையும் குருத்துவத்தின் 60ஆவது ஆண்டையும் ஆயத்துவத்தின் 35ஆவது ஆண்டையும் நிறைவு செய்து மீண்டும் ஒரு மும்மடி விழா நாயகனாக திகழும் இளைப்பாறிய ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும், செபங்களையும் அர்ப்பணிக்கிறோம்.

## யோண் பிரான்சிஸ் அ.ம.தி அடிகளார் இறைவனடி சேர்ந்தார்



அமலமரித் தியாகிகளின் அனுபவமிக்க மூத்த குருக்களில் ஒருவரான யோண் பிரான்சிஸ் அ.ம.தி அடிகளார் 29.01.2002 அன்று தமது 81ஆவது வயதில் காலமானார்.

இவர் அனுராதபுரம், ஊர்காவற்றுறை, நாவாந்துறை, நல்லூர், மிருசுவில், பாசையூர் பங்குகளில் பணிபுரிந்தவர். சிறந்த நிர்வாகியாகிய இவர் 1973-1976ஆம் ஆண்டு வரை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும், 1976-1989ஆம் ஆண்டு வரை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்விப் பணிபுரிந்தார்.

இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களை காணிக்கையாக்குகிறோம்.

## இரு குருக்களை அர்ப்பணம் செய்த தாயார் மரணம்



அருள்திரு எம்.எக்ஸ். கருணாரட்ணம் (கிளி), அருள்திரு எம்.பி. ஞானரட்ணம் ஆகியோரின் தாயார் திருமதி மேரி இராசமணி மரி யாம்பிள்ளை 25.01.2002 மல்லாவியில் இறைவனடி சேர்ந்தார். 30ஆம் திகதி வவுனிக்குளம் புனித வேளாங்கன்னி ஆலய சேமக்காலையில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. திருமதி மேரி இராசமணி மரியாம்பிள்ளையின் ஆத்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இறைப்பாற பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களை காணிக்கையாக்குகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதியின்றி சமாதானமில்லை மன்னிப்பின்றி நீதியில்லை**

## எம் கருத்து

# பாதை திறப்பு அவசர தேவை

தமிழ் மக்களின் நீண்டகால துன்ப துயர அனுபவங்களுக்கு நீதியோடுகூடிய நிரந்தர தீர்வு காண வேண்டும் என்ற நீண்டகால தேவை காலத்துக்குக் காலம் வரும் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, சமாதானத் தீர்வு என்பவற்றால் வருவதும் பின்னர் இல்லாமல் போவதும் வழமையான நிகழ்வுகளாகிவிட்டன.

இந்தத் தடவை எப்படியும் ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எல்லாத் தரப்பினரிடையேயும் நிறையவே உண்டு. அரசும் விடுதலைப் புலிகளும் நல்லெண்ண சமிக்ஞைகளை விடுத்துக்கொண்டு பேச்சுவார்த்தையை எப்படியும் ஆரம்பிக்க வேண்டும் என்பதே எல்லோருடைய வேண்டுதலாகும்.

மக்களுடைய துன்ப துயரங்களை மனிதாபிமான ரீதியில் தீர்ப்பதற்கு ஆரம்ப நடவடிக்கையாக பாதை திறப்பது முக்கியமானதாகும். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது புத்தாண்டு செய்தியில் தரைவழிப் பாதை திறக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். "நீண்டகாலமாக வட பகுதி மக்கள் அனுபவிக்கும் பல்வேறுபட்ட துன்ப துயர அனுபவங்களுக்கு அடிப்படையாகவிருப்பது பெருநிலப்பரப்புடன் தொடர்பற்றிருக்கும் தரைவழிப் பாதையாகும். இத் தரைவழிப் பாதை திறக்கப்படும் பட்சத்தில் வடபகுதி மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் இலகுவாக தீர வழியுண்டு. இத் தரைவழிப் பாதையை ஒரு சுமூகமான தீர்வின் அடிப்படையில் திறந்து விரைவில் யாழ். வன்னி மக்களது துன்பங்களுக்கு ஒரு முடிவினைக் கொண்டுவர வேண்டும் என்று இவ் வேளையில் அழைப்பு விடுக்கிறேன்'' என ஆயர் தம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆயருடைய இவ் வேண்டுதலுக்கு வலுசேர்க்கும் வகையில் வடபகுதி வாழ் மக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச அமைப்புக்களும், தனியார் அமைப்புக்களும் குரல் கொடுக்கவும், செயற்படவும் வேண்டும் என நாம் ஒரு பகிரங்க அழைப்பு விடுக்க விரும்புகிறோம்.

வட பகுதித் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை அதிகமாக்கி விடுவது இப் பாதைத் தடையே ஆகும். கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் பிரயாணம் செய்வதால் மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொள்வதில் பல இடையூறுகளும், நாள்கணக்காய் காத்திருக்க வேண்டிய கடின அனுபவங்களும் உண்டு. விமான பயணத்திற்காக பெருந்தொகைப் பணத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு, பொருள்களின் அநியாய விலையேற்றம், வைத்திய வசதிகளை எல்லோரும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியாமை, உயர் கல்வி வசதி, பல்கலைக்கழக கல்வி, வேலைவாய்ப்பு, தபால் - தந்தி தொடர்புகள், மின்சார வெட்டு, வன்னியில் வாழும் உறவினர்களை சந்திக்க முடியாமை எனப் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

ஒட்டுமொத்தமாக சொல்லப்போனால் மக்களுடைய அன்றாட, சராசரி வாழ்க்கை செலவு உயர்த்தப்படுகின்றது.

இவை அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் பாதை மூடப்பட்டுள்ளமையே. சாதாரண மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் துன்ப, துயரங்களை கவனத்திற்கொண்டு முதலாவதாக பாதையை திறப்பதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் உடனடியாக ஆவண செய்ய முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம்.

இதனை வலியுறுத்தி வட பகுதி வாழ் மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அமைப்புக்கள், தனியார் அமைப்புக்கள் என்பன ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும். மாசி மாதம் 24ஆம் திகதி செய்யப்படவிருக்கிற புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் பாதை திறப்பையும் மேற்கொள்ளும்படி அழைப்பு விடுக்கிறோம்.

# அவலங்கள் ஒலிக்கட்டும்

**பாப்பரசரின் பிரதிநிதி யாழ். நகருக்கு வருகைதந்தபோது "வலம்புரி'' பத்திரிகை எழுதிய அவலங்கள் ஒலிக்கட்டும் என்ற ஆசிரியத் தலையங்கத்தை பாதுகாவலன் வாசகர்களுக்காக மறுபிரசுரம் செய்கின்றோம்.**

புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்களின் பிரதிநிதி அதிவணக்கத்திற்குரிய தோமஸ் யே செங் நாண் ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார். 1995ஆம் ஆண்டு புனித பாப்பரசர் கொழும்புக்கு வருகை தந்தபோது யாழ்ப்பாணத்திற்கு அவர் வருகை தரமாட்டார் என மக்கள் ஏங்கியதுண்டு ஆனால் பாப்பரசரின் இலங்கைப் பயணம் அன்றைய யுத்த சூழ்நிலையில் கொழும்போடு நின்றுவிட்டது.

தற்போது வருகை தந்துள்ள பாப்பரசரின் பிரதிநிதியை யாழ் குடாநாட்டு மக்கள் உவகையோடு வரவேற்கின்றனர். அதேவேளை அவரிடம் குடாநாட்டு மக்கள் ஓர் பகிரங்கமான கோரிக்கையை உதவியை முன்வைக்கின்றனர். அது எதுவெனில் புனித வத்திக்கானில் ஒலித்த சமாதானம் என்ற நெருக்கீடற்ற தூய சுவாசத்தை எமக்குப் பெற்றுத் தாருங்கள் என்பதே ஆகும். கடந்த 20 வருடங்களாக தமிழினம் அடிமைப்பட்டு அடக்கப்பட்டு வருகிறது உரிமை இல்லை மாறாக ஊரடங்கே உண்டு மருத்துவம் இல்லை அதனால் மரணங்கள் மலிவு, சொந்த மண்ணில் தமிழர்கள் படுகின்ற வேதனைகள் சொல்லும் வகையன்று ஆயினும் தமிழர்களுக்காக உலக நாடுகள் கொடுத்த குரல் தெரிவித்த அனுதாபம் போதாதென்றே கூற வேண்டும்.

மண்ணின் விடுதலைக்காக உரிமைக்காக போராடுகின்ற விடுதலைப் புலிகளை உலக நாடுகள் தடை செய்கின்றனவே இதை சிலுவை சுமந்த யேசுவின் பெயரால் தடுத்து நிறுத்துங்கள் தமிழர்கள் படுகின்ற அவலங்களை உலகில் ஒலிக்க செய்யுங்கள் விடுதலைப் புலிகளை தடைசெய்வதன் மூலம் தமக்கென இருக்கக் கூடிய ஒரேஒரு சொத்தையும் உலக நாடுகள் ஒடுக்குவதாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர்இந்த உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறுங்கள் தங்களின் வருகை சிங்களப் பேரினவாதத்தினால் அடக்கப்பட்டு விடிவு தருவதாக ஒளி பாய்ச்சுவதாக அமையட்டும்.

**நன்றி:- வலம்புரி ஆசிரியத் தலையங்கம், 20.01.2002.**




"வயது வந்தோர்க்கு மட்டும்'' பகுதியை ஆரம்பித்ததுமே சில கட்டுரைகளும் கடிதங்களும் வந்து சேர்ந்துள்ளன. யாரும் எழுதலாம், எதையும் எழுதலாம் என்று எழுதியதற்கு பலர் விளக்கம் கேட்டுள்ளார்கள்.

இளையோர்களின் பிரச்சினைகள் பற்றிய கேள்விகளை எழுப்பலாமா? என்று கேட்டிருக்கிறார்கள். இப் பகுதியை ஒரு திறந்த பகுதியாகவே வைத்திருக்கிறோம். உங்கள் கேள்விகளுக்கும் தேவைகளுக்குமேற்ப அதனை ஒழுங்கமைத்துக் கொள்வோம். தேவையேற்படும் போது அந்தந்த பகுதிக்குரிய "வல்லுனர்களை'' அணுகுவோம்.

இப் பகுதிக்கு வரும் கட்டுரைகளை 'சென்சர்' செய்வீர்களா என்றும் கேட்டு எழுதியிருக்கிறார்கள். இயன்றவரையில் பிரச்சினைகளை இனம் காணவும் அவற்றுக்குத் தேவையான விளக்கங்களைக் கொடுக்கவும் முயல்வோம்.

ஓரளவு சுதந்திரமாகவே இப் பகுதியை இயங்கவிட விரும்புகிறோம். தேவையேற்படின் 'சென்சர்' செய்வோம். மிக அவசரப்படுகிறீர்களே! சற்றுப்பொறுங்கள்! போராட்ட கதையொன்று அடுத்தவாரம்...

**-பிள்ளை-**

### ஒரு நிமிடம் இளையோரே!

என் அன்பான இளையோர் செல்வங்களே! இவ் ஆண்டு உங்களுடைய பெருமையான ஆண்டு. நிச்சயம் வளமை பொங்கும் வகையில் இவ் ஆண்டைப் பயன்படுத்துவோம். நானும் வளர்ந்து, நாமும் உயர்ந்து எமது எதிர்காலத்தை வளம்படுத்திக் கொள்வோம்.

இவ் வருடம் பாடசாலையில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்கள் முதல் அனைத்துநிலை இளையோர்க்கும் பின்வரும் பயிற்சிகளை வழங்க உள்ளோம்.

- மதிப்பீட்டுக் கல்வி
- பிரஜையை உருவாக்குதல்
- இளைஞர் ஆன்மீகம்
- ஆளுமையும் மனித உறவும்
- போட்டோ மொழியும் குழுநிலை ஆய்வும்
- இன்னும் பல

நீங்கள் தயாரா?

ஆயர், ஆணைக்குழுக்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பெரியோர், மதகுருமார் இவர்கள் எல்லோரும் உங்களுக்குத் துணை புரிய தயாராகிவிட்டார்கள்.

அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ்
இயக்குனர்
இளையோர் ஆணைக்குழு

## நீ என்ன சொல்கின்றாய்..? 2

**இளையோரே!
இப்போது
எனக்குள் சில கேள்விகள்
உன்னைக் காணும் போது.....
ஏன் சற்று வித்தியாசமாய்
காட்சி தருகின்றாய்?
உன் பெற்றோர்
அந்நியர் போலாகினரோ?
கல்வி புகட்டிய ஆசிரியர்கள்
எதிரிகள் போலாகினரோ?
சமூக ஈடுபாட்டாளர்கள்
உன் விரோதிகளாயினரோ?
மதத் தலைவர்கள்
உன் விமர்சனத்துக்குரியவரானரோ?
மனிதரும் மதிப்பீடுகளும்
உன்னருகில் இல்லையோ?
உன் எதிர்கால கனவுகளே
சூனியமாகி விட்டனவோ?
உன் சுயத்தின் தேடல்
உனக்கே சுமையாகியதோ?
இன்னும் பல கேள்விகள்........
உன் போக்குகளும்
வரத்துக்களும் கேள்விகளை
எழுப்பி நிற்கின்றன.
உன்னை
உன் நிலையை கண்டு
மனம் வருந்துகின்றேன்
கவலை அடைகின்றேன்
உன்னில்
உனக்குள்
மாற்றம் காண ஆசிக்கின்றேன்
நீ என்ன எண்ணுகின்றாய்?
சற்று சிந்தித்துப் பார்......
.......
இருப்பினும்
நீ
எனக்கு என்றும்
அதிசயத்துக்குரியவன்!
அதிசயத்துக்குரியவள்!
உன் துடிப்புக்களை ரசிக்கின்றேன்
இளமையின் வேகத்தை மெச்சுகிறேன்.
விமர்சனப் போக்கை உருசிக்கிறேன்
உன் உணர்வுகளை அறிகின்றேன்
உன்னை 'நீயாகவே'
அன்பு செய்ய முயல்கின்றேன்
இவை பம்மாத்து வரிகளல்ல
என் உணர்வுகளின்
சிந்தனையின் வரிகள்
நீ இதை நம்பாதிருக்கலாம்
இருப்பினும் இது உண்மையே
இவற்றை உன்னுடன்
பகிர்ந்து கொள்கின்றேன்
இருவருமே சேர்ந்து வளர்வோம்
என் உணர்வுகளை கவனி
என் சிந்தனைகளை பார்
என் பேச்சுக்கு செவிகொடு
இருப்பினும்.......
அப்படியே உள்வாங்கிடாதே
விமர்சனத்துடன் நோக்கு
அமைதியில் தியானித்துப்பார்
அங்கு வெளிப்படும்
உன் எண்ணங்களை எழுதிவை
அவை உனக்கு உதவும்
உன்னை நீயே தூய்மையாக்கு
உன் உணர்வுகளை கூர்மையாக்கு
உன் உறவுகளை ஆழப்படுத்து
அப்போது
நீ
நான் மட்டுமல்ல
இந்த மனுக்குலமே
வியப்படையும்
மகிழ்ச்சியடையும்.
நீ
என்ன சொல்கின்றாய்???**

**- சின்னமணி -**

**திரைப்படங்கள் எல்லா சமூகத்தினரிடையேயும், குறிப்பாக இளைஞர்களிடையே பாரிய தாக்கங்களை ஏற்படுத்த வல்லது. நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படுத்தப்படும் இத் தாக்கங்களின் விளைவுகள் ஏராளம். திரைப்படத்தை பொழுது போக்காக பார்த்தாலும் அதனை ஆய்வுசெய்வதன் மூலம் நல்லவற்றையும் தீயவற்றையும் பிரித்து அறிவுக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்ள வேண்டும்.**

**"திரைப்படத் திறனாய்வு'' பகுதி ஒன்றினை ஆரம்பிக்கின்றோம் - படித்துப் பயனடைவீர்.**

**"ரெட்'' திரைப்படத்தை நீங்களும் பார்த்திருப்பீர்கள். இங்கு தரப்பட்ட இச் சிறிய விளக்கத்துடன் இப் படத்துக்கான விமர்சனத்தை உங்களிடம் இருந்து 20.02.2002முன் எதிர்பார்க்கிறோம். தரமான விமர்சனத்துக்கு பரிசு வழங்கப்படும்.**

**திரைப்படத் திறனாய்வு செய்யப்படுவது பற்றிய கட்டுரையை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்!**

சிறுவயதில் அநாதவராக தேரடியில் கைவிடப்பட்ட சிறுவன் ரெட் சமூகத்தின் அசமந்தப் போக்கினாலும் சிரத்தையின்மையாலும் சண்டியனாக உருவாகுகிறான். சிறுபராயத்திலிருந்து படிக்க வேண்டுமென்ற ஆதங்கம் இருந்தது. ஆனால், சூழ்நிலை காரணமாக அவனால் படிப்பை மேற்கொள்ள முடியவில்லை. எனவே ஏனையோர் கல்வியில் முன்னேற்றம் பெற துணை செய்கிறான். நன்மைசெய்ய வேண்டும் மற்றவர்கள் தன்னால் மகிழ்ந்திருக்க வேண்டும் என்ற ஆர்வம் அவனுள் மேலோங்கிக் கொள்ள காணப்படுகின்றது. நம்புவோருக்கு தன் இன்னுயிரையும் அர்ப்பணிக்க கூடியவனாக "ரெட்'' சித்தரிக்கப்படுகிறான்.

ஆனால், கல்வி அபிவிருத்தி, சமூக முன்னேற்றம் போன்றவற்றை மேம்படுத்த பயன்படுத்தப்படும் வழிமுறைகள் சமூக, சமய, ஒழுக்க கோட்பாடுகளுக்கு இசையாத தன்மை கொண்டவையாக காணப்படுகின்றன. முடிவுகள் அதற்குத் துணை போகும் வழிமுறைகளை நியாயப்படுத்த முடியாது என்னும் வாதம் இங்கு புகுத்தப்படுகின்றது. "ரெட்''டினால் கையாளப்படும் வழிமுறைகள் அதாவது சண்டித்தனம், கொலை மிரட்டல் என்பவற்றை அவனது நன்மையான காரியங்கள் மூலம் நியாயப்படுத்த முடியுமா? என்பதே இங்கு எழுப்பப்படும் கேள்வி. குறிப்பாக, பாடசாலை அதிபரை மிரட்டி அனுமதி பெறுதல், பாடசாலை கட்டடம் கட்ட சாராயக் கடையை இரவு 7.00மணி வரை திறக்க அனுமதித்தல் போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.




இவற்றைவிட "ரெட்'' செய்யும் வேலைகளை இயக்குனர் ராம் சந்தியா சமூகத்தில் பலதரபட்ட வர்களூடாக நியாயப்படுத்த விழைகிறார். கதாசிரியர் மணிமேகலை, குருவானவர், சட்ட வல்லுனர், காவல் அதிகாரிகள், ஆசிரியர், வாசகப் பெருமக்கள், நண்பர்களுடன் அப் பிரதேசத்தை சார்ந்த மக்கள் அனைவராலும் சமூகத்தின் வளர்ச்சிக்கு, மக்களின் நன்மைக்கு செய்யப்படும் எவ்வகையான காரியங்களும் அவை சட்டத்திற்கு முரணான காரியங்களாக இருந்தாலும் வரவேற்கப்பட வேண்டியவையே என்பது இயக்குனரின் நோக்கம்.

இந்த நோக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியுமா? நன்மையான காரியங்களாகவிருந்தாலும் அவை அரசியல், பொருளாதார, சமூக, சமய கோட்பாடுகளுக்கு இசைவாக முக்கியமாக சமூக, சமய ஒழுக்கங்களுக்கும் நன்னெறிகளுக்கும் இசைவாக அமைதல் வேண்டும். அப்போதுதான் எல்லோராலும் அது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக அமையும். இதற்கு "ரெட்'' திரைப்படமே வலுச் சேர்க்கிறது. காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும்போது அவன் பின்னால் சென்ற அவனை ஊக்கப்படுத்திய ஒருவரும் அவனை சென்று சந்திக்கவில்லை. இந்நிகழ்வு அடாவடித் தனத்தையும் சண்டித்தனத்தையும் மக்கள் எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்கள் என்ன நன்மை செய்தாலும் மக்கள் வெகுவிரைவில் இவர்களை மறந்துவிடுவார்கள் என்பதையே கட்டியம் கூறி நிற்கின்றது.

"ரெட்'' திரைப்படத்தில் கூறப்படும் ஒரு கருத்து இளையோரால் நன்மை செய்ய முடியும். அவர்கள் எண்ணம், சிந்தனை, செயல் என்பன பக்குவப்படுத்தப்பட்டு தகுதியான பாதையை நோக்கி செயற்படுத்தப்பட வேண்டும். இதற்கான தார்மீகப் பொறுப்பு சமூகத்திடமே தங்கியிருக்கிறது. இளையோரின் வளர்ச்சியில் சமூகத்தின் சிரத்தை இன்றியமையாததாக காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதி நீதியின்மேல் கட்டப்பட வேண்டும் என அடிக்கடி திருத்தந்தை கூறுவதையே இம் மண்ணின் மக்களும் வேண்டி நிற்கிறார்கள்

## தங்கள் வருகை எம் மண்ணின் அவலங்களுக்கு முடிவு வந்துவிட்டதென இயம்பும் முன்னோடியாக இருக்கட்டும்

## திருத்தந்தையின் பிரதிநிதியிடம் ஒரு பகிரங்க வேண்டுதல்

**பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ் யே செங் நாண் ஆண்டகையின் முதலாவது யாழ். வருகையின்போது யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, குருக்கள், துறவியர், இறைமக்கள் இணைந்து 20.01.2002 அன்று புனித மரியன்னை பேராலயத்தில் வாசித்து உவந்து அளித்த வாழ்த்துப் பத்திரம்.**

**திருத்தந்தை இரண்டாம் அருளப்ப சின்னப்பரின் பேரருட் பிரதிநிதியே!**

### வரவேற்கும் மண்

வந்தாரை வரவேற்கும் இம் மண்ணான யாழ்ப்பாணம், எம் திருத்தந்தையின் இடமாக வந்திருக்கும் உங்களையும், கரங்கூப்பி இனிதாக வரவேற்கின்றது! மலர் தூவி மனமார வணங்கி நிற்கின்றது! செந்தமிழாலே சிரம் தாழ்த்தி வாழ்த்தி நிற்கின்றது!

### திருத்தந்தைக்கு நெஞ்சு நிறை நன்றிகள்

பதினாறாம் நூற்றாண்டில் வேர் விட்ட எம் திருமறை, தன் வரலாற்றில் வாழ்ந்த காலங்கள் பல கடந்த கோலங்கள் பல. தொடக்க காலம்! வளர்ச்சிக்காலம்! வேதனைக்காலம்! மறுமலர்ச்சிக்காலம்! புதுப்பொலிவுக்காலம்! இன்று, அது சோதனைக் காலத்துள் இழுக்கப்பட்டு, புடமிடப்பட்டு, தூய ஆவியின் இசைப்பட்டு அருள் நிழல் பொழியும் கற்பகத் தருவாய் உயர்ந்தும் பரந்தும் விரிந்தும் செறிந்தும் நிற்கின்றது. இப்பெருமையில் பெரும்பங்கு திருதந்தையர்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் உண்டு. அவர்கள் தான் இத் தலத் திருச்சபையைத் தட்டிக் கொடுத்து, ஊக்குவித்து உற்சாகமூட்டி, அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று உயிருட்டியவர்கள். அவர்கள் அனைவருக்கும், குறிப்பாக எம் ஞானத்தந்தையாக அருள்வழி காட்டும் இரண்டாம் அருளப்ப சின்னப்பருக்கும் எம் நெஞ்சு நிறைந்த நன்றிகள். உம்மில் நாம் எம் திருத்தந்தையைக் கண்டு அவர்பால் நாம் கொண்டுள்ள உயர் மதிப்பையும் பெரும் அன்பையும் உறுதியான பக்தியையும் இவ் வேளையில் எடுத்துக்கூற விழைகின்றோம்!

### துப்பாக்கிகள் ஓய்ந்திருக்கின்றனவே தவிர! ஒழித்துக்கட்டப்படவில்லை!

**ஆண்டகைப் பெருந்தகையே!**

தாய்வான் என்ற தீவைப் பிறப்பிடமாக கொண்ட உங்களுக்கு இலங்கை போன்ற தீவின் அருமையும் பெருமையும் அதன் சிக்கல்களும் சிதைவுகளும் புரியும். இரண்டாவது உலகயுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில், 1941ல், பிறந்த உங்களுக்கு யுத்தத்தின் வெறிகளும் வெற்றிகளும் அவலங்களும் அழுகைகளும் விளைவுகளும் புதியவையுமல்ல புதிர்களுமல்ல. எப்போதோ நீங்கள் பார்க்க விரும்பிய இந்த யாழ். மண்ணில், இப்போது துப்பாக்கிகள் ஓய்ந்திருக்கின்றனவே தவிர, ஒழித்துக் கட்டப்படவில்லை. எறிகணைகள் தம் பாய்ச்சலை நிறுத்தி நிற்கின்றனவேயன்றி, நிர்மூலமாக்கப்படவில்லை. சுற்றிவளைப்புக்கள் வேகம் தணிந்தனவேயன்றி, கோபம் தீரவில்லை. எமது "செம்மணிகளும் சாவகச்சேரிகளும்" அவைகளுள் "கிருஷாந்திகளும்" எப்பொழும் நாம் காவப் போகும் சுமைகள்.

### அழுபவர்கள் பக்கம் சாய்ந்தார்கள்

"பிடிபடுபவன் எவனும் வாளால் மடிவான். அவர்களின் கண்கள் காணும்படியே அவர்களுடைய குழந்தைகள் நசுக்கப்படுவர் அவர்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்படும். அவர்களின் மனைவியர் கற்பழிக் கப்படுவர்" என்று இறைவாக்கினர் இசையாஸ் கூறியவை நமது கசப்பான அனுபவங்கள். பாணன் இசைத்த எமது யாழ்., அழக்கூட முடியாத நிலைக்கு மீண்டும் மீண்டும் பாழடிக்கப்பட்டது. அவ்வேளைகளில், இப்பாழடைந்த யாழுக்கு அப்பாலும் எழுந்த அவலங்களுக்குக் குரல் கொடுத்தனர் நம் ஆயர்கள். அஞ்சாது அவர்கள் சொல்லியவை அகிலத்தின் மனச்சான்றைத் தட்டி எழுப்பியது. பக்கம் சாய்ந்தனர் என்றார் ஒரு சிலர். உண்மைதான், அவர்கள் அழுபவர்களின் பக்கம் சாய்ந்தார்கள்! நீதியின் பக்கம் சாய்ந்தார்கள். இதைச் செய்யும் துணிவையும் திடனையும் அவர்களுக்கு அளித்த உலகத் திருச்சபைக்கும், திருத்தந்தைக்கும் இம்மண் என்றும் கடமைப்பட்டுள்ளது.

### போர் வெறி கொண்ட மண்ணல்ல இது

போர் வெறி கொண்ட மண்ணல்ல இது. யாழின் இசை கண்ட மண்! அமைதிக்காக ஏங்கும் மக்கள் வாழும் மண்! நீதியுடன்கூடிய அமைதியே நிலைத்து நிற்கும் எனக் கூக்குரலிட்டு சரிநிகர் சமானமாக வாழத்துடிப்பவர்கள் நடமாடும் மண் எங்கள் மண். அமைதி, நீதியின் மேல் கட்டப்படவேண்டும் என அடிக்கடி திருத்தந்தை கூறுவதையே இம் மண்ணின் மக்களும் வேண்டி நிற்கின்றார்கள். இந்நிலையைத் திரிபுபடுத்தாது எடுத்துரைக்கும் தகுதி, யாழ். மண்ணுக்கு வருகை தந்த ஆண்டகையே, உங்களுக்கு உண்டு. அதைச் செய்வீர்கள் என நம்பிக்கை எமக்கு உண்டு.

### இன்று வீசும் சமாதான காற்றுக்கு வத்திக்கான் அரசியலும் ஒரு காரணி

இலங்கைத் தீவில் இன்று வீசும் சமாதானக் காற்றுக்கு வத்திக்கான் அரசியலும் ஒரு காரணி எனக் கூறுவது மிகையன்று. அதில், உங்களுக்கும் ஒரு பங்கு உண்டு என அறிவதில் நாம் மகிழ்கின்றோம். இக் காற்றுப் புயலாக மாறாது தென்றலாக வீசி நிற்க இறைவன் திருவருளை என்றுமே வேண்டி நிற்போம்.

### உமது வருகையால் எம் மண் பெருமையுற்றுள்ளது

**அருட்தந்தையே!**

எம்மண்ணில் நீங்கள் காலடி எடுத்து வைத்த கணப்பொழுதிலிருந்து, சந்திப்பவர்களுடன் அன்பொழுக உரையாடும் எளிமையையும், எம் மக்களின் சுமைகளையும் அவைகளின் வரலாற்றுப் பின்னணிகளையும் நன்கு புரிந்து வைத்திருக்கும் திறந்த மனத்தின் அனுதாபத்தினையும் நாம் வியக்கிறோம். பாராட்டுகின்றோம். அதன் பலா பலன்களை அடைவோம் என உறுதியுடன் நம்புகிறோம்.



**ஆண்டகையே!**

உமது வருகையால் எம்மண் பெருமையுற்றுள்ளது. பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளது. இவ் வருகை எம் மண்ணின் அவலங்கட்கு முடிவு வந்துவிட்டது என இயம்பும் முன்னோடியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் மீண்டும் எமது ஆழ்ந்த அன்பையும் நன்றி மறவாப் பண்பையும் இறைவன் பால் நாம் எழுப்பும் வேண்டுதல்களையும் திருதந்தையின் பிரதிநிதியாகிய உங்களுக்கும் திருத்தந்தை இரண்டாம் அருளப்ப சின்னப்பருக்கும் கூறி இறை இயேசுவில் விடைபெறுகிறோம்.

**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்**
**20.01.2002**

# வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் 3ஆம் தரப்பு மத்தியஸ்த்தத்துடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வை உருவாக்கும்படி கோரியிருக்கிறார்கள்

## மக்களுடைய இந்த கோரிக்கையை ஏற்று நாட்டில் சமாதானம் நிலவ கடினமாக நாம் உழைப்போம்

## திருத்தந்தையின் பிரதிநிதியின் பதிலுரை



இம் மண்ணிற்கு வர ஆவலாயிருந்தேன்

திருதந்தையின் இலங்கைக்கான பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்ட காலத்திலிருந்து இந்த மண்ணிற்கு வருவதற்கு மிகவும் ஆவலாயிருந்தேன். இங்கு வந்து உங்களோடு .உங்கள் துன்பங்களில் பங்குகொள்ள விரும்பினேன். அக்கனவு இப்போதுதான் நனவாகியது. திருச்சபையும், திருத்தந்தையும் உங்கள் மேல் கொண்டுள்ள அன்பையும், அக்கறையையும் நான் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

உங்களது வரவேற்பிற்கும், உபசரிப்பிற்கும் எனது நன்றியைத் தெரிவீதுக் கொள்கின்றேன். சிறப்பாக யாழ். ஆயர் அவர்கட்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடுதான் நீங்கள் பயணித்துள்ளீர்கள

20ஆண்டு காலமாக நீங்கள் பல்வேறு இன்னல்களிற்கும் இக்கட்டுகளிற்கும் உள்ளாகியிருக்கிறீர்கள். நீண்டகால, குறுகிய கால, இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளீர்கள். இதன் காரணமாக பலர் பல நாடுகளிற்கு குடிபெயர்ந்தும் உள்ளார்கள், உதாரணமாக கனடா, மற்றும் வேறு கண்டங்களிற்கும் இத் துன்ப காலத்தில் பலர் இறந்திருக்கின்றார்கள், பலர் அனாதைகள் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள், பலர் விதவைகள் ஆகியிருக்கின்றார்கள். இப்பட்டியலை நாம் நீட்டிக் கொண்டே போகலாம். நீங்கள் இத் துன்பங்களினூடாக பயணித்தவர்கள் என்று அறிகின்றபோது உண்மையில் வாழ்விற்கு புத்தூக்கம் கிடைக்கின்றது. இத்துன்பங்களிற்கு எல்லாம் தீர்க்கமான முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தான் நீங்கள் பயனித்துள்ளீர்கள்.

### வறுமையிலும் வாழத் தெரியும் வளமையிலும் வாழத் தெரியும்

வறுமையிலும் வாழத்தெரியும் வளமையிலும் வாழத்தெரியும் புனித சின்னப்பரின் கூற்றுக்கு இணங்க புதிய சவால்களிற்கும், புதிய சூழமைவுகளிற்கும், முகம் கொடுக்க நீங்கள் பழக்கப்பட்டு விட்டீர்கள். தூய ஆவியின் பிரசன்னம் உங்களோடு இருப்பதையே இது நமக்குக் காட்டுகின்றது. இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட நாம் புதிய உலகத்தைப் படைப்ப[illegible] கப்பட்டுள்ளோம். [illegible] இந்த உலகில் தீமை உண்டு. தீமை தன்பக்கத்தில் எம்மை ஈர்த்துக் கொள்ளாத விதத்தில் நாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### உங்களது தலத் திருச்சபை உயிரூட்டமானது

இச்சின்னம் சிறியவர்களிற்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் நீங்கள் எனக்கே செய்தீர்கள் என்று புனித மத்தேயு குறிப்பிடுவதைப் போன்று உங்கள் இல்லங்கள், ஆலயங்கள், பாடசாலைகளை துன்புற்றவர்களுக்குத் திறந்து பகிர்தலின் வழியாக ஆண்டவரின் பிரசன்னத்தை மற்றவர்களிற்கு வெளிப்படுத்தியிருக்கின்றீர்கள், என்பது வெள்ளிடைமலை கிறிஸ்துவினுடைய அன்பை நீங்கள் வெளியுலகிற்குக் காட்டியிருக்கின்றீர்கள். உங்களது அன்புச் செயல்கள் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றது. உங்களது தலத் திருச்சபை உயிரூட்டமானது என்பதை எண்ணி நீங்கள் பெருமை அடைய வேண்டியவர்கள்.

### இம் மறைமவட்டத்தின் மற்றைய பகுதியான வன்னியை நாம் மறந்துபோகக் கூடாது

இம் மறைமாவட்டத்தின் மற்றைய பகுதியான வன்னியை நாம் மறந்து போகக் கூடாது. அவர்கள் அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் மிகவும் கடினமான, இறுக்கமான [illegible] அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மீள தமது சொந்த இடங்களிற்கு வர முடியாது தவித்துக்கொண்டு இருக்கிறார்கள் எமது சகோதர சகோதரிகள் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

### நாமே எமது வரலாற்று நாயகர்களாக திகழ வேண்டும்

திருச்சபையைச் சேர்ந்த நாம், பார்வையாளர்களாக இல்லாமல், புதிய படைப்பிற்கு வித்திடுபவர்களாக வாழ திகழ வேண்டும். மற்றவர்களால் எமது வரலாறு உருவாக்கப்படுவதாக இருக்காது, நாமே எமது வரலாற்றை படைப்பவர்களாக இருக்க வேண்டும். நாமே எமது வரலாற்றின் நாயகர்களாகத் திகழவேண்டும். கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்துவதன் மூலமும், பிற சமயத்தவர்களோடு உரயாடல்களை வலுப்படுத்துவதன் வாயிலாகவும், உண்மையும், நீதியும், சமத்துவமும் நிறைந்த புதிய சமூகத்தை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அண்மையில் நடைபெற்ற தேர்தலும், புதிய அரசமைப்பு உருவாக்கமும் மக்கள் மத்தியில் சமாதானமும், நீதியும் நிறைந்த தீர்வுக்கான நம்பிக்கையை ஏற்படுத்தியருக்கின்றது. வடக்கு, தெற்கு வாழ்மக்கள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்துடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வை உருவாக்கும்படி கோரியிருக்கின்றார்கள். மக்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று இந்த நாட்டில் சமாதானம் நிலவ நாம் கடினமாக உழைப்போம். நாம் அனைவரும் சமாதானத்தின் கருவிகளாகத் திகழ வேண்டும் என சமாதானத்திற்கான செய்தியை திருதந்தை 2002ஆம் ஆண்டு சமாதான தினத்தில் அறை கூவலிட்டார் மன்னிப்பின் வழி சமாதானத்திற்காக நாம் உழைக்கவேண்டும்.

### ஆபத்தான காலகட்டத்திலும் யாழ். திருச்சபை தன் வரலாற்றுக் கடமையை நேர்த்தியாக நிறைவுசெய்யும்

எந்த ஒரு கட்சியோ, அல்லது அமைப்போ எமக்கு சமாதானத்தை தந்துவிடுமென்று இருந்துவிட முடியாது. சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து இதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எமது குடும்பங்கள், துறவறக் குழுமங்கள், பங்குகள் இதிலே அதிக ஈடுபாடு கொள்ள வேண்டும். மக்களது நலனில் அக்கறை கொள்கின்ற திருச்சபை அமைதியின் குரலுக்கு செவிமடுத்து, அமைதியை உருவாக்க உழைக்க வேண்டும். பலருடைய மீட்பிற்காக தன்னுயிரை அர்ப்பணித்த கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி வாழ நாம் அழைக்கப்படுகின்றோம்.

ஈற்றில் இந்த ஆபத்தான கால கட்டத்திலும் யாழ். தலத் திருச்சபை தனது வரலாற்று கடமையை நேர்த்தியாக நிறைவு செய்யும் என நான் நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ் யே செங் நாண் ஆண்டகையின்





திரு ஜெயராஜா மன்னார் ஆயருக்கு மாலையிடும்போது தீபமேற்றல் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கண்டி ஆயர் வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை



பாப்பரசரின் பிரதிநிதி தீபமேற்றுகிறார்



கட்டட இஞ்சினியர் திரு. தனசிங்கம் தீபமேற்றுகிறார்



கட்டட திறப்பு விழாவில் ஆயர்



கட்டட கலைஞர்களுடன் யாழ். ஆயரும் பாப்பரசரின் பிரதிநிதியும்



பாண்ட் வாத்திய இசை முழங்க மார்ட்டினார் குருமடத்தில் நுழையும் போது



மார்ட்டினார் குருமடத்தில் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் குருத்துவ 60ஆவது ஆண்டு நிறைவுத் திருப்பலி



விழா நாயகன் சாள்ஸ் அடிகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திர யாழ். வருகை நிகழ்வுகளை என்றும் நினைவுகளாக்கிட...





மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, திருமலை-மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, கட்டட கதாநாயகன் ஜே.பீ.ஈ. செல்வராஜா அடிகள்



எமிலியானுஸ் ஆண்டகையின் உருவபட திரைநீக்கம்



கட்டட ஒப்பந்தகாரர் திரு. ஜெயராஜா, கட்டட கலைஞர்கள்



அன்னை திரேசா சபை கன்னியருடன்



மார்ட்டினார் குருமட மடுமாதா சொரூபத்தின் முன் பாப்பரசரின் கொடியேற்றம்



விழா நாயகனும் பிரதிநிதியும்



திருப்பலிக்கு ஆராத்தி வரவேற்கப்படும்போது




யாழ். பேராலய நுழைவாயில் வரவேற்பு - இறைதூதரே வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பேராலயத்தினுள் வரவேற்பு நடனத்துடன் பாப்பரசரின் பிரதிநிதி அழைக்கப்படுகிறார்



## பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ் யே செங் நாண் ஆண்டகையின் சரித்திர யாழ். வருகை நிகழ்வுகளை என்றும் நினைவுகளாக்கிட...



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நுழையும்போது



திருப்பலி ஆரம்பம் நறுமணப் புகையுடன்



பாப்பரசரின் பிரதிநிதி மறையுரையாற்றும்போது





வரவேற்பு நிகழ்வில் யாழ். ஆயர், பிரதிநிதி



இறுதியில் 'தர்ஷனா' நாடக நடிகர்கள், இயக்குனர் பிரதிநிதியுடன்



பார்வையாளர்களில் ஒரு பகுதியினர்



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை ஆயர் சகிதம் பார்வையிட்டபோது



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு குருமாணவர்களுடன்





திருச்சிலுவை கன்னியர் வைத்திய நிலைய Dr.Sr. இம்மாகுலேற், Sr. தானியா ஆகியோர் சகிதம்,



திருச்சிலுவை கன்னியர்கள் பிரதிநிதியுடன் குழுவாக நின்றபோது



கொழும்புத்துறை அமலமரித் தியாகிகளின் குருமடங்களில் பிரதிநிதியின் வருகையில் முதல்வர் அருள்திரு ஜீவேந்திராபோல் அ.ம.தி., போல் நட்சத்திரம் அ.ம.தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் வரவேற்பும், அதிபர், பிரதிநிதி, யாழ். ஆயர், கொழும்பு O.B.A. தலைவர் திரு வின்சென்ட் ஆகியோரின் உரையையும் காணலாம்.

## "வாருங்கள்... இயேசுவே எமக்கு பதில்"

### "Come Jesus is the Answer" - 27.01.2002

## திருப்பாலத்துவ சபை ஞாயிறு சிந்தனைகள்

சமாதானத்துக்காக ஒரு நல்ல செயலை செய்ய நீர் விரும்புகிறீரா? இவ் ஆண்டில் சமாதானம் நிலைக்க பாலர் நீங்கள் செய்யக் கூடியவை....

**வீட்டில்**

"காலையும், மாலையும் ஒன்றிணைந்து செபித்தல்.

"பாடசாலைக்கு அல்லது வெளி பயணங்கள் செல்லுமுன் பெற்றோர், பெரியோருக்கு வணக்கம் செய்தல்.

"பெற்றோர், பெரியோருக்கு கீழ் படிந்து அமைந்து நடத்தல்.

**பாடசாலையில்**

"ஆசிரிய, ஆசிரியர்களை வணங்கி அவர்களுக்கு மதிப்பளித்தல்

"மற்ற சமய, சாதி மாணவர்களை விஷேச அன்புடன் மதித்து கௌரவித்தல்.

"தம்மிடமுள்ள (பொருள்கள் மட்டுமன்றி) ஞான காரியங்கள், கல்வி, இறையன்பு ஆகியவற்றை மற்ற சிறுவர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.

**சமுதாயத்தில்**

"உங்கள் வாழ்க்கையின் ஊடாக கிறிஸ்துவின் சமாதானத்தை அறிவியுங்கள்.

"எல்லா இடங்களிலும் விசேஷ சமாக தேவாலயத்திலும் அமைதியான வணக்கத்துடன் இருங்கள்.

"கிறிஸ்துவின் வார்த்தைகளை எந்நேரமும் சிந்திக்கும் சிறுவர்களாக இருங்கள்

"உங்கள் நடை, உடை பாவனை யாவும், சாந்தி, சமாதானத்தை காணக்கூடியதாக இருத்தல்.

"எல்லா சபைகளிலும் உள்ள சிறுவர்களுடன் அன்பு, சமாதானத்துடன், பழகி அவர்களை கௌரவித்து வாழ்வதுடன், நாம் எல்லோரும் ஒரே பாதையில் செல்வதால் அவர்களுடன் கைகோர்த்து இறைபயணம் செய்க.

"நண்பர்கள் மட்டுமன்றி, எதிராளிகளுடனும் அன்பு, சமாதானத்துடன் பழகுங்கள்.

"சிந்தனை, தீர்மானம், செயல்கள் இவைகளின் ஊடாக நல்லதையே செய்ய பழகுங்கள்

அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்.....

# திருநெல்வேலி பங்கு திருப்பாலத்துவ சபை சிறுவர்களின் எழுச்சிப் பேரணி

திருப்பாலத்துவ சபை ஞாயிறு தினமான 27.01.2002 அன்று திருநெல்வேலிப் பங்கு திருப்பாலத்துவ சபை சிறுவர்கள் திருநெல்வேலி - கோப்பாய் பங்குத்தந்தை அ. செலஸ்ரின் அ.ம.தி. அடிகளின் தலைமையில் எழுச்சிப் பேரணி ஒன்றினை நடாத்தினர்.

அன்றையதினம் மாலை 4.00 மணியளவில் கோப்பாய் மரியன்னை ஆலய முன்றலிலிருந்து இப் பேரணி ஆரம்பமாகி திருநெல்வேலி சவேரியார் ஆலய முன்றலை வந்து அடைந்தது.

இந்த எழுச்சிப் பேரணியில் கோப்பாய் வடக்கு மரியன்னை ஆலயம், கோப்பாய் தெற்கு சூசையப்பர் ஆலயம், திருநெல்வேலி சவேரியார் ஆலயம் ஆகியவற்றின் திருப்பாலத்துவ சபைகளைச் சேர்ந்த சிறுவர்கள் பங்குபற்றினர்.

தமிழ் மண்ணில் மிக நீண்ட காலமாக நடந்துவரும் போரும் அதன் தாக்கங்களும் சிறுவர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. சிறுவர்களுடைய எதிர்கால வாழ்வு நலன்களும் பெரும் கேள்விக் குறியாகியுள்ள இவ்வேளையில் நடாத்தப்பட்ட திருப்பாலத்துவ சபை சிறுவர்களின் இவ் எழுச்சிப் பேரணியில் இப் பிரதேசங்களில் வதியும் மற்ற மதங்களைச் சார்ந்த சிறுவர்களும் கலந்துகொண்டது இங்கு குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

போரிலே பிறந்தோம், போரிலே வளர்ந்தோம் போர் வேண்டாம்.

உங்கள் செல்வங்கள் நாம் எம்மோடு வல்லுறவு வேண்டாம்.

உணவு, உடை, உறையுள் இவை மட்டும் போதுமா?

எம்மை வாழ, வளர வழிகாட்டுங்கள்.

என்ற சுலோக அட்டைகள் எழுச்சிப் பேரணியில் கொண்டு செல்லப்பட்டன.

இதே பங்கில் ஜனவரி 21ஆம் திகதி நாட்டில் சமாதானம் நிலவ வேண்டி சமாதானப் பேரணி ஒன்றினை பங்கு மக்கள் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் இறையாசீர் வேண்டியும் நடத்தப்பட்ட இந்த சமாதானப் பேரணியை மத வேறுபாடின்றி சுமார் 300ற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. கோப்பாய் மரியன்னை ஆலய முன்றலில் இருந்து சைக்கிள்களில் ஊர்வலகமாக புறப்பட்டு பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்தி - உரும்பிராய் வீதி, பலாலி வீதியூடாக கோண்டாவில் செபஸ்ரியார் ஆலய முன்றலை பேரணி வந்தடைந்தபோது விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

### அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் முதலிடம்

கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்ற 2001ஆம் ஆண்டுக்கான அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டிகளில் 5 யாழ். மாவட்டப் பாடசாலைகள் வெவ்வேறு போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றுள்ளன.

இவற்றில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த குருநகர் மாணவியான செல்வி அன்ரன் செல்வக்குமார் லிண்டா திறந்த போட்டிப் பிரிவில் குறுநாடக ஆக்கத்தில் 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் எழுதிய "தோழமை" எனும் சமூக நாடகத்துக்கு முதலிடம் கிடைத்துள்ளது.

இதேபோல், யாழ். புனித ஜோண் பொஸ்கோ பாடசாலை இராசாவின்தோட்ட மாணவியான செல்வி முத்துக்குமார் மெடேன் ஆன்சியா 2ஆம் பிரிவில் எழுத்தாக்கப் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.



திருநெல்வேலி, கோப்பாய் பங்கினர் நடாத்திய சமாதானப் பேரணியில் பதாதைகள் தாங்கிய இளைஞர்களும் பங்குத்தந்தை அ. செலஸ்ரின் அ.ம.தி. அடிகளாரும் பேரணிக்கு ஆயத்தமாக.

### தும்பளை புனித லூர்து அன்னை திருவிழா 11 – 02 – 2002

நவநாள் 02-02-2002 சனிக்கிழமை வழிபாடுகள் பி.ப 5.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். 10-02-2002இல் ஞாயிறு மாலை 4.45க்கு திருப்பலியும், நற்கருணை வழிபாடும் இடம்பெறும். பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள் மறையுரைகளை நிகழ்த்துவார், ஜீவாபோல் அ.ம.தி அடிகள் நற்கருணை வழிபாட்டை நிகழ்த்துவார். 11-02-2002இல் திங்கள் காலை முதற் திருப்பலி 6.30 மணிக்கும், 7.00மணிக்கு இடம்பெறும் திருநாட் திருப்பலியை மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நிகழ்த்துவார்.


## நீங்கா நினைவுடன் பத்தாண்டுகள்



மலர்வு 04 09 1921 — உதிர்வு 14 02 1992

**அமரர் அன்ரனி பெர்னாண்டோ துரைசிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

ஐயா!
ஊனோடு உயிர்தந்து
வாழ்வோடு வளமீந்து
எந்தையாய் நின்று மறைந்தீர்...
காலன் உங்கள் கரம் பற்றிப்
பத்தாண்டு போனதோ......
பதறிடும் பாசங்கள்
பாமாலை தொடுத்து உங்கள்
மேலோக மறுவாழ்வின்
மேன்மைக்காய் வேண்டுகிறோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்
தகவல்:- மகள்
அருட்சகோதரி பெலிசிற்றா (நல்லாயன் சபை)

நிரந்தர முகவரி:-
'செல்வஸ்தான்'
மண்குழி வீதி, ஊர்காவற்றுறை.

**2nd year** — **7th year**





REV. FR. JOSEPH RAJAKARIER — REV. FR. ANTON RAJAKARIER

29-02-2000 ← Died → 01-02-1995

*We loved you in life. Let us not forget in death.*
*Prayerfully remembered.*

Block L, No.9 1st Floor Govt. Flats
Colombo-4

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 30 09 1929 — உதிர்வு 04 02 1998

**DR. L. மரியநாயகம்**

(அலுக்கை, அளவெட்டி)

உயிர் உள்ளவரை எம்மை
நேசித்தீர், மரணத்திலும்
உம்மை நாம் மறவோம்

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (அரு. 11:25)

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

No. 3A Bodhirukkarama Rd,
Kalubowela,
Dehiwela.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான பேச்சுவார்த்தைக்கு சர்வதேச பாதுகாப்பு வலைபின்னல் ஒன்று அவசியம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பேராயர் மேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவை ஆயர் இல்லத்தில் சந்தித்து உரையாடிய போது

## பிரதமர் கொழும்பு பேராயர் சந்திப்பில்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்புப் பேராயர் மேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்து உரையாடியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னல் (International Safety Net) ஒன்று அவசியம். இதை நோக்காகக் கொண்டே நாம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றோம். உலக நாடுகள் பல அரசியற் தீர்வுக்கு ஆதரவு அளித்து வருகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா முதலிய நாடுகள் இது விடயத்தில் தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளன. உலக நாடுகள் பல தம் பிரச்சினைகளுக்கு இந்த வழியில் தீர்வைக் கண்டு வெற்றி பெற்றுள்ளன. புலிகள் இயக்கமும் அரசியல் தீர்வை விரும்புகின்ற வேளை நாமும் அரசியற் தீர்வுக்கு ஆதரவாக இருக்கிறோம்.

இரு தரப்பினருக்குமிடையிலிருக்கும் சந்தேகங்கள் நீக்கப்பட வேண்டும். அதற்கு இருவரும் மனம் திறந்து பேசவேண்டும். புலிகள் இயக்கம் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. நாமும் சில விடயங்களை முன் வைத்துள்ளோம். இதிலொரு பொது உடன்பாடு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

இச் சந்திப்பின்போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோண் அமரதுங்க சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக பேராயர் அவர்களுக்கு விளக்கம் அளித்தார். அருள்தந்தையர்கள் கிங்ஸ்லி ஜெயமான, விக்கிரமசிங்க, பிளசிடஸ் சில்வா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். இறுதியில் சர்வதேச கண்காணிப்புக் குழு கண்காணிப்பில் ஈடுபடுவது பற்றி முன்னரே முடிவு செய்யப்பட்டுள்ளது. சமாதான பேச்சுவார்த்தையில் இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்றார் பிரதமர்.

## பாசையூர் மரியாயின் சேனையின் 80வது ஆண்டு நிறைவு

மரியாயின் சேனையின் 80வது ஆண்டு நிறைவும், பாஷையூர் இரட்சகருடைய மாதா பிரசீடியத்தின் 1400வது கூட்ட நிறைவும், பிரசீடிய விழாவும் அண்மையில் அருள்தந்தையர்கள் எம். டேவிற், சாள்ஸ் கொலின்ஸ் ஆகியோரின் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது.

இப்பங்கில் வளர்ந்த பெண்கள், யுவதிகள், இளைஞர்கள் என 3 பிரசீடியங்கள் இருப்பதையிட்டு நாம் மகிழ்கிறோம். ஒரு பங்கின் வளர்ச்சிக்கு பக்திச் சபைகளின் செபம் பெரும் உதவிபுரிகின்றது என்று மறையுரையில் டேவிற் அடிகளார் குறிப்பிட்டார்.

பிற்பகல் நடைபெற்ற கலை நிகழ்வின் போது யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆசிசெய்தி எமது பங்குத்தந்தையால் வாசிக்கப்பட்டது. யாழ். கொமிற்சிய மரியாயின் சேனை ஆன்ம இயக்குனர் R.H. சகாயநாயகம் அடிகளார் தமது வாழ்த்துச் செய்தியில் இப் பிரசீடிய வளர்ச்சியை பெரிதும் பாராட்டுகிறேன் என்றார். பங்குத்தந்தை தமது உரையில், பங்கின் சேனையார் தனக்கு வலக்கரமாகவும் இடக்கரமாகவும் இருந்து நோயாளர்களிற்கு நற்கருணை வழங்க செபத்தாலும் சேவையாலும் துணைபுரிகின்றனர் என கூறினார்.

யாழ். கொமிற்சிய தலைவர் M.A. பிரகாசராசா தமது ஆசிச் செய்தியுடன் இப்பங்கின் பிரசீடியங்கள் மேல் சபையுடன் இணைந்து முழுமையாகச் செயற்படுவதை எடுத்துரைத்தார். வருகை தந்த அனைத்துப் பிரசீடியத்தினர்க்கும் பக்திச் சபையினர்க்கும் பிரசீடியத் தலைவி திருமதி யூலியானா பிறின்ஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். துணைத்தலைவர் சிசிலியா யோசப் வரலாற்று அறிக்கை வாசித்தார். செயலாளர் மௌறியா றொபட்டின் நன்றியுரையுடன் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

தகவல் :- பங்குத்தந்தையும், மரியாயின் சேனையாரும்



பொதுநிலையினர் ஆணைக் குழுவினரின் விவிலிய டிப்ளோமா கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் விழாவில் ஆணைக்குழு இயக்குனர் R.H. சகாயநாயகம் அடிகள் குத்துவிளக்கேற்றுவதையும் ஆணைக் குழுவின் செயலர் பெ. பிரான்சிஸ் அவர்களால் ஆயர் பொட்டிட்டு வரவேற்கப்படுவதையும் காணலாம்.

இந்நிகழ்வு பற்றிய முழுமையான செய்தி விளக்கத்தை மேலும் படங்களுடன் அடுத்த இதழில் எதிர் பாருங்கள்!

## வ.அ.தோமஸ் அடிகளாரின் 38வது ஆண்டு நினைவு



மண்ணில் 07.03.1886, துறவற அர்ப்பணம் 02.02.1910, குருவாக திருநிலைப்படுத்தல் 06.01.1912, செபமாலை தாசர் சபை ஸ்தாபகம் 02.02.1928, விண்ணகத்தில் 26.01.1964.

## வடபகுதி வாழ்...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆகும்.

கப்பல் மூலமாகவும் விமானம் மூலமாகவும் பயணம் செய்வதற்கு பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்வதில் நாட்கணக்காய் காத்திருக்கவும், தரகர்களுக்கு பணம் கொடுக்கவும், வேண்டியுள்ளது. விமானப் பயணத்திற்காக அதிக பணத்தை செலவு செய்ய வேண்டி உள்ளது. எரிபொருட்களை தாரளமாகப் பெற்றுக்கொள்ள முடியாமலும், பொருட்களை அநியாய விலை கொடுத்து வாங்கவும், வைத்திய வசதிகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியாமலும் உள்ளது. பல்கலைக்கழக கல்வி, வேலைவாய்ப்பு, தபால் தந்தி தொடர்புகள், மின்னிணைப்பு என்பனகூட பிரச்சினைக்குள்ளாகி உள்ளது. போக்குவரத்தில் பெரும் கஷ்டங்களும், வன்னியில் வாழும் உடன்பிறப்புக்களையும், உறவினர்களையும் சந்திப்பதில் இடையூறுகளும் உருவாகியுள்ளது.

ஒட்டுமொத்தமாக சொல்லப் போனால் வடபகுதிவாழ் மக்களின் வாழ்க்கை செலவு தரை வழிப் பாதை மூடப்பட்டமையால் வெகுவாக அதிகரித்துள்ளது.

வடபகுதி வாழ் மக்களுக்கு தரைவழிப் பாதையை திறந்துவிடுவது மிகவும் அவசியமான தென்பதில் இருவேறுபட்ட கருத்து இருக்க முடியாது. விடுதலைப் புலிகள் கண்டி A9 வீதி ஊடாக அல்லது பூநகரியினூடாக இப் பாதையைத் திறப்பதற்கு தமது சம்மதத்தையும், நல்லெண்ணத்தையும் தெரிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

இப்போது பாதை திறப்பதற்கான முடிவினை எடுக்கின்ற பொறுப்பு அரசிடமே உண்டு. நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி கைச்சாத்திடப்படும்போது பாதை திறப்பதற்கு நடவடிக்கையையும் எடுக்க ஆவண செய்ய வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன அண்மையில் யாழ். நகருக்கு விஜயம் செய்திருந்தபோது தரை வழிப் பாதையை ஒன்றைத் திறப்பதற்கான அவசியத்தை அவருக்குத் தெளிவுபடுத்தினோம். மாங்குளத்திற்கும் - கிளிநொச்சிக்கும் கண்டி வீதி ஊடாக பாதையை திறக்க முற்படுகின்ற வேளையில் குடாநாட்டுக்கான பாதையையும் திறப்பது சமாதான முயற்சிகளுக்கு பெரிதும் வழிவகுக்கும். இங்கிருக்கும் இராணுவத்தினர் இதனை நிச்சயம் வரவேற்பார்கள். எனவே, ICRC மூலமாக அல்லது UNHCR மூலமாக இதற்கான தகுந்த பதிலை உடன் அறிவிக்கும்படி வேண்டுகின்றோம்.

பரந்தன் - இயக்கச்சி A9 தரைவழிப் பாதை பாவிக்கக்கூடியதாக உள்ளது. விடுதலைப் புலிகள் எல்லா நிலக்கண்ணிகளையும் அப்பாதையிலிருந்து அப்புறப்படுத்தி உள்ளார்கள். மிருசுவிலிலிருந்து - பளைக்கான பாதைக்கும் அவ்விதமே செய்வது கடினமானதல்ல. மிகுதிப் பாதையான மிருசுவில் - யாழ்ப்பாண பாதை இராணுவத்தினராலும் பொதுமக்களினராலும் ஏற்கனவே பாவனையில் உள்ளது.

வடபகுதி மக்களின் அவசர தேவையான இப் பாதை திறப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் உகந்த நேரம் இதுவாகும்.

எனவே, வடபகுதி வாழ் மக்கள் அனைவர் பேராலும் மனிதாபிமான ரீதியில் இவ் வேண்டுகோளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி தங்களை மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

## அரசு முன்னே...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தையே இன்று சகலரும் விரும்புகின்றனர். இவ் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமையாகும். அரசின் சகல முயற்சிகளுக்கும் ஆயர்களாகிய நாம் எப்போதும் ஒத்துழைப்பு வழங்க ஆயத்தமாக உள்ளோம். கடந்த காலங்களில் சமாதான முயற்சிகளுக்கு நாம் பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். சமாதானத்தை எட்டுகின்ற முயற்சி மனிதர்களால் மட்டும் செய்யக்கூடிய ஒன்று அல்ல, இறையருளும் ஆசீரும் இதற்குத் தேவை. இம் முற்சியில் ஈடுபடுகின்ற சகலருக்காகவும் நாம் இறையருளை பிரார்த்திக்கிறோம்.

## நீதியும் மனித...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனைவரும் சிறப்பு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

சிறப்பு விருந்தினரான திரு வின்சன்ட் பேசுகையில் "யுத்த நெருக்கடிகள் அழிவுகள் மத்தியிலும் கல்லூரி சிறந்த சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டிருப்பதினை பாராட்டியதுடன் பழைய மாணவர்கள் அனைவரும் கல்லூரிக்கு நன்றியுடையவர்களாக இருப்பதுடன் அதன் வளர்ச்சிக்கும் உதவ வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

## பல்கலை. மாண...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்க மக்களும் முயற்சி செய்ய வேண்டும்

பொங்கு தமிழ் நிகழ்வு சிறப்பானது ஆர்வம் பெறுவதற்கும் தியாகம் செய்யவதற்கும் காரணமாக அமைந்தது. நாம் நிறையச் செய்ய வேண்டும். சமுதாயம் எங்களுக்கு நிறைய நன்மை செய்துள்ளது. எனவே மாணவர்களாகிய நீங்களும் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டும். விடுதலைப் புலிகளின் தடை நீக்கம், மக்களுக்கான அடிப்படை வசதிகள் அரசை நம்ப முடியவில்லை என்ற விடயங்கள் அடங்கிய மாணவர்களின் பல கேள்விகளுக்கு பதிலளிக்கையில் ஆயர் பின்வருமாறு தெரிவித்தார்.

"எந்த முயற்சியானாலும் படிப்படியாக முன்னெடுக்கப்படும் முயற்சிகள்தான் வெற்றி பெறும். கடந்த கால நிகழ்வுகளை மறந்துவிட வேண்டும் அது கசப்பு நிறைந்த அனுபவம் நாம் வளர்ச்சியின் பாதையில் செல்ல வேண்டும் அதுவே நமக்கு நல்லது. வன்னி பொருளாதாரத் தடைநீக்கம், மோதல் தவிர்ப்பு போன்ற விடயங்களை நாம் வரவேற்று அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து, நாகரீகமான முறையில் யாவற்றையும் அணுக வேண்டும்" என ஆயர் தெரித்தார்.

## தேவதாயின் தரிசனங்கள்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி புவனேஸ்வரி அம்மாள் இரத்தினராஜா எழுதும் புதிய தொடர் "தேவதாயின் தரிசனங்கள்" அடுத்த பாதுகாவலன் இதழில் ஆரம்பமாகும்.

தேவ அன்னையின் பிரான்ஸ் நாட்டின் லூர்து பதியின் முகப்புத் தோற்றம்.



## பாதுகாவலன் சந்தாப் பணம் கட்டாதவர்களுக்கு!

பாதுகாவலன் பத்திரிகையை தொகையாகவோ, தனியாகவோ பெற்று நீண்டகாலமாக பல அறிவித்தல்களுக்குப் பின்னரும் பணம் கட்டாதவர்களுடைய பெயர், விபரங்கள் சிலரின் வேண்டுகோளை அடுத்து பாதுகாவலனில் வெளியிடுவதை பின்தள்ளியுள்ளோம்.

இன்னும் பணம் கட்டாதவர்களுக்கான இறுதி அறிவிப்பு இதுவாகும். பெயர், விபரங்கள் பாதுகாவலனில் வெளியிட்ட பின் நிர்வாகத்தோடு தயவு செய்து கோபிக்க வேண்டாம்.

தயவுசெய்து உடன் தொடர்புகொண்டு பாதுகாவலன் பணத்தினை செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஓவ்செற் முறையில் 2002ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. P.197 T.P.2378